
என் வீட்டில் தொலைக்காட்சி பெட்டி வைத்துக்கொள்ள எனக்குப் பிரியமில்லை. இல்லை. ஐயா. அது என் வீட்டில் இருப்பது எனக்குப் பிரியமில்லை. அதை துப்பாக்கியால் சுட்டு உடைத்து விடுவேன். அந்த பொல்லாத காரியத்தோடு யாதொரு தொடர்பும் கொள்ள எனக்குப் பிரியமில்லை. ஆம், ஐயா




**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

- வீட்டிலிருந்து கொண்டு தொலைக்காட்சி பார்க்கும்படியான காரியத்தில் அது கண்டனம் செய்யவில்லையா?
- தேவனை நேசிப்பதைக் காட்டிலும் தொலைக்காட்சிகளை நேசிப்பவர்கள்
- ஜெப ஆராதனையில் பங்கு கொள்வதற்கு பதிலாக தொலைக்காட்சி நிகழ்ச்சியைக் காண்கிறார்கள்
- தேவனுடைய வார்த்தையில் போதுமான அக்கறையில்லை
- பழைய ஆதாமின் சுபாவம்
- தொலைக்காட்சியிலிருந்து தொலைகாட்சிக்கு அலைந்து திரிகிறார்கள்
- பிசாசு திரைப்படக் காட்சிகளை நேராக வீடுகளுக்குள்ளேயே கொண்டு வந்து விட்டான்
- அவள் தொலைக்காட்சி போன்றவைகளினால் வஞ்சிக்கப்பட்டுவிட்டாள்
- உங்களுடைய கணவராகிய கிறிஸ்துவுக்கு விரோதமாக விபச்சாரம் செய்து கொண்டிருக்கிறீர்கள்
- பெரிய பயங்கரமானவைகளை கற்பனை செய்ய தூண்டும் தொலைக்காட்சி

- தொலைக்காட்சியில் மார்க்க சம்பந்தமான நிகழ்ச்சிகள் - இயேசு கிறிஸ்துவுக்கு இழிவைக் கொண்டு வருகிறது
- தொலைக்காட்சி உலகத்துக்கே ஒரு சாபமா? – நான் இணங்குகிறேன்
- அழுகிப்போன அருவருப்பான தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் - சுவற்றின் மேலுள்ள கையெழுத்து
- மனநிலை கோளாறை உண்டாக்கும் தொலைக்காட்சி பெட்டியை உங்கள் துப்பாக்கியை உபயோகித்து நொறுக்குவது நலம்
- தொலைக்காட்சி பெட்டியை உங்கள் வீட்டினின்று அப்புறப்படுத்தி தூர எறியுங்கள்
- நான் தொலைக்காட்சிக்கு விரோதமானவன்
- தொலைகாட்சி பெட்டியை அப்புறப்படுத்தி விட்டு குடும்ப ஜெபத்தை மறுபடியும் தொடங்குங்கள்
- அசுத்தமான தொலைக்காட்சிகளிலிருந்து விலகியிருங்கள்
- வேதத்திலுள்ள கதைகளை (பிள்ளைகளுக்கு) கூறுவதற்குப் பதிலாக பிள்ளைகளைத் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு முன்னால் உட்காரச் செய்கின்றனர்



## வீட்டிலிருந்து கொண்டு தொலைக்காட்சி பார்க்கும்படியான காரியத்தில் அது கண்டனம் செய்யவில்லையா?

பின்பு உங்களுக்கு தலைகனம் வருகிறது. பெரிய எண்ணங்கள் வருகிறது, ஏன்? நான் வீட்டிலிருந்து கொண்டு தொலைக்காட்சி பார்க்கும்படியான காரியத்தில் அது என்னை கண்டனம் செய்யவில்லை. நண்பர்களோடு புகைபிடிக்க அது என்னை கண்டனம் செய்யவில்லை அல்லது அவ்வப்போது குடிக்க அது என்னை கண்டனம் செய்யவில்லை. நீங்கள் என்னவாயிருக்கிறீர்கள் என்று உங்கள் கனிகள் சொல்லும்.

**ஐக்கியத்தின் ஒருமைப்பாடு,** *58-0128*



## தேவனை நேசிப்பதைக் காட்டிலும் தொலைக்காட்சிகளை நேசிப்பவர்கள்

சபை என்ன செய்தது? சரியாக துரிதமாக அவரை சபை அங்கத்தினர் பதவியிலிருந்து நீக்கிப்போட்டது. “என் நாமத்தினால் நீங்கள் ஜெப ஆலயங்களுக்கு புறம்பாக்கப்படுவீர்களானால் பாக்கியவான்களாய் இருப்பீர்கள்”.

அவர்கள் அகந்தையுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாகவும் இருப்பார்களென்று வேதம் சொல்லுகிறது. எப்பொழுது? கடைசி நாட்களில், தேவனை நேசிப்பதைக் காட்டிலும், தொலைக்காட்சிகளையும், சிற்றின்பங்களையும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும் இருப்பார்கள், “இப்பொழுது நான் உங்களுக்கு சொல்லுகிறேன், நீங்கள் அந்த கூட்டங்களுக்கு போகாதீர்கள்.

ஏனென்றால் அவைகளில் ஒன்றுமில்லை.'' அவதூறு செய்கிறவர்கள், வேதம் அவ்விதமாக சொல்லுகிறது. "தேவ பக்தியின் வேஷத்தை தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாகவும் இருப்பார்கள்''.

**ஐக்கியத்தின் ஒருமைப்பாடு** *58-0128*



## ஜெப ஆராதனையில் பங்கு கொள்வதற்கு பதிலாக தொலைக்காட்சி நிகழ்ச்சியைக் காண்கிறார்கள்

"II தீமோத்தேயு 3-ஆம் அதிகாரத்தில் கடைசி காலத்தில் உள்ள சபையைக் குறித்து "துணிகரமுள்ளவர்களாயும் இறுமாப்புள்ளவர்களாயும் தேவ பிரியராயிராமல் சுகபோகப் பிரியராயும் இருப்பார்கள்'' என்று அவர் உரைத்திருக்கிறார். சபை உலகத்தை எடுத்துக் கொள்ளுங்கள்,

"தேவப்பிரியராயிராமல் சுகபோகப் பிரியராய் இருக்கிறார்கள்," புதன்கிழமை இரவு ஜெப ஆராதனையில் பங்கு கொள்வதற்கு பதிலாக வீட்டிலேயே தங்கி தொலைக்காட்சி நிகழ்ச்சியைக் காண்கிறார்கள்.

"அது பாப்டிஸ்ட் தான்" என்று நீங்கள் கூறலாம்.

அது பெந்தேகோஸ்தேயினர்! நிச்சயமாக! ஆம் ஐயா. ஓ! "துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், சுகபோகப் பிரியர்களாயும்;" அவர்கள் மூக்கிற்கு கீழாக வார்த்தை வைத்துப் பாருங்கள், அதை அவர்கள் காணவே மாட்டார்கள். அஹ்—அஹ். "தேவப்பிரியராயிராமல் சுகபோகப் பிரியராயும்", தங்கள் மயிரைக் கத்தரிக்கக்கூடாது என்று ஸ்திரிகளிடம் கூறிப்பாருங்கள், எப்படியாயினும் கத்தரித்து விடுவார்கள். அஹ்—அஹ். "தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும், இணங்காதவர்களாகவும், அவதூறு செய்கிறவர்களாகவும்,

இச்சையடக்கமில்லாதவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும் இருப்பார்கள்.”

**சாயங்கால செய்தியாளன்**

*63-0116*



## 4. தேவனுடைய வார்த்தையில் போதுமான அக்கறையில்லை

நல்லது, நம்முடைய பெந்தெகோஸ்தே ஸ்திரீகளுக்கு என்ன நேர்ந்தது?

அதிகமான தொலைகாட்சி (TV) நிகழ்ச்சிகளை பார்த்து விட்டீர்கள்! நீங்கள் உலகத்தின் காரியங்களை மிகவுமாக கண்டுவிட்டீர்கள்.

ஆதலால் தேவனுடைய வார்த்தையில் உங்களுக்கு போதுமான அக்கறை உண்டாவதில்லை. இப்பொழுது, அதைத்தான்

வேதாகமம் கூறுகின்றது. அது நானல்ல, இப்பொழுது, அது தான் வேதாகமம்.

**சாயங்கால செய்தியாளன்** *63-0116*



## பழைய ஆதாமின் சுபாவம்

ஆனால் சபையே, உனக்கு என்ன நேர்ந்தது?

நீ தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை அதிகமாகக் கண்டு, உலகத்தின் காரியங்களை அதிகமாகக் கொண்டிருக்கிறாய்.

உன்னுடைய பழைய ஆதாமின் சுபாவம் மிதந்து சென்று அதற்குள் நுழைந்து, மற்றவர்களைப் போல் நடந்து கொள்வதென்பது மிகவும் எளிது.

**வழிநடத்தும் தன்மை** *65-1207*



## தொலைக்காட்சியிலிருந்து தொலைகாட்சிக்கு அலைந்து திரிகிறார்கள்

உண்மையான முன்குறிக்கப்பட்ட விசுவாசிகள் வார்த்தையில் நிலைத்திருப்பார்கள். ஏனெனில் அவர்கள் அந்த வார்த்தையின் ஒரு பாகமாய் இருக்கின்றனர்.

ஓ, அலைந்து திரியும் நட்சத்திரங்களே, எவ்வளவு காலம் நீங்கள் அலைந்து திரிவீர்கள்?

மெதோடிஸ்டுகளே, பாப்டிஸ்டுகளே, பிரஸ்பிடேரியன்களே, வெளியில் உள்ளவர்களே, நீங்கள் யாராயிருந்தாலும்; சபைக்கு சபை, ஓரிடத்திலிருந்து மற்றொரு இடம், தொலைக்காட்சியிலிருந்து தொலைகாட்சிக்கு, உலகத்திலிருந்து

உலகத்துக்கு அலைந்து திரியும் நட்சத்திரங்களே, நீங்கள் ஏன் வரக்கூடாது?

அவர் உங்களுடன் ஐக்கியங்கொள்ள வாஞ்சையுள்ளவராயிருக்கிறார். அவர் உங்களுக்காக ஆவல் கொண்டிருக்கிறார். உங்கள் மனம் புதிதாகிறதினாலே அவர் உங்களை, சபைக்கு அல்லது ஸ்தாபனத்துக்கு அல்ல, அவருடைய வார்த்தைக்கு மறுரூபப்படுத்த விரும்புகிறார்.

அந்த வாஞ்சை உங்களில் இருக்குமானால், நீங்கள் வார்த்தையின் ஒரு பாகமாக இருக்கிறீர்கள்.

நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்.

மத்.5:6

**மறுரூபப்படுத்தும் தேவனுடைய வல்லமை** *65-0911*



## பிசாசு திரைப்படக் காட்சிகளை நேராக வீடுகளுக்குள்ளேயே கொண்டு வந்து விட்டான்

நம்முடைய தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படுகிற எல்லா காரியங்களும் தணிக்கை செய்யப்படாத கீழ்த்தரமான நகைச்சுவைகள் அழுகிப்போன ஒழுக்கக் கேடான காட்சிகள்தான். அது எல்லாவற்றிற்குள்ளும் புகுந்து கொண்டிருக்கிறது. ஆகவே மக்கள், அந்த பிசாசு...

ஆதி பெந்தேகொஸ்தே மக்களாகிய நாம் அநேக வருடங்களுக்கு முன் நம்முடைய பிள்ளைகளை திரைப்படத்திற்கு செல்வதற்கு கூட நாம் அனுமதிக்க மாட்டோம்.

ஆனால் இப்பொழுதோ பிசாசு அழகாக நம் வீடுகளுக்குள் கொண்டு வந்து வைத்துவிட்டான்.

நீங்கள் பாருங்கள்? ஆகவே திரைப்படக் காட்சிகளை நேராக வீடுகளுக்குள்ளேயே கொண்டு வந்து விட்டான்.

**சாங்கால செய்தியாளன்** *63-0116*



## அவள் தொலைக்காட்சி போன்றவைகளினால் வஞ்சிக்கப்பட்டுவிட்டாள்

இன்றைக்கும் அதுதான் நடந்து வருகிறது. அவள் தொலைக்காட்சி, பத்திரிகைகள், ஜனங்கள், தெருக்களில் நடப்பவை போன்றவைகளினால் வஞ்சிக்கப்பட்டுவிட்டாள்.

நவீன காலத்து பெண்கள் பத்திரிகைகளில் படங்களைப் பார்க்கின்றனர், தெருக்களில் நடந்து செல்லும் பெண்களைக் காண்கின்றனர். கடைகளில் விற்கப்படும் உடைகளை காண்கின்றனர்.

நரகத்தின் அதிபதியாகிய பிசாசு ஜனங்களின் மத்தியில் வந்து, இவைகளை செய்யும்படி அவர்களை வஞ்சித்து விட்டான்.

ஸ்திரீயானவள் தான் சரி என்று நினைத்துக்கொள்கிறாள். ஆனால் அவள் மரித்துப்போனதை அறியாமலிருக்கிறாள்.

அவள் தேவனை விட்டு தூரம் சென்றுவிட்டாள்.

அது எவ்வளவு தந்திரமுள்ளதென்றும், அவள் எப்படி இவையனைத்தும் இழந்துவிட்டாளென்றும் பார்த்தீர்களா?

**மணவாட்டியின் காணக்கூடாத**
**இணைப்பு** *65-1125*



## உங்களுடைய கணவராகிய கிறிஸ்துவுக்கு விரோதமாக விபச்சாரம் செய்து கொண்டிருக்கிறீர்கள்

நீங்கள் உலகத்தோடு வேசித்தனம் செய்திருக்கிறீர்கள்.

நீங்கள் நடனங்களுக்குச் சென்று இசைப்பேழையில் ஆரவார இசைப்புச் சந்த நிகழ்ச்சிக்குச் சென்று, கீழ்த்தரமான இழிவான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை உன்னிப்பாக கவனிக்கிறீர்கள், நீங்கள் கிறிஸ்துவை உங்களுடைய கணவன் என்று அழைத்துக் கொண்டே, அவர்பேரில், அவருக்கு எதிராக விபச்சாரம் செய்து கொண்டிருக்கிறீர்கள்.

**கர்த்தருடைய இரண்டாம் வருகை** *57-0417*



## பெரிய பயங்கரமானவைகளை கற்பனை செய்ய தூண்டும் தொலைக்காட்சி

கர்த்தரின் நாமத்தினால், ஒரு நேரம் வரப்போகிறது. அப்பொழுது ஜனங்கள் முழுவதும் பைத்தியம் பிடித்தவர்களாய் ஆகிவிடுவார்கள். வேதம் அவ்வாறு கூறுகின்றது.



அவர்கள் பயத்தில் கூக்குரலிட்டு அலறுவார்கள் - தங்கள் மனதில் பெரிய பயங்கரமானவைகளை கற்பனை செய்துகொண்டு. வானொலிகளும் தொலைக்காட்சிகளும் அத்தகைய பயங்கரமான காட்சிகளை காண்பிக்கின்றன.

**இதை அறியாமல் இருக்கிறாய்** *65-0815*



## தொலைக்காட்சியில் மார்க்க சம்பந்தமான நிகழ்ச்சிகள் - இயேசு கிறிஸ்துவுக்கு இழிவைக் கொண்டு வருகிறது

அன்றொரு நாள் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றைக் காணும்படி என்னை அறைக்கு அழைத்தனர். பில்லி பால் என்று நினைக்கிறேன், அல்லது வேறு யாரோ, தொலைக்காட்சியில் மார்க்க சம்பந்தமான

நிகழ்ச்சி ஒன்று நடைபெறுவதாக என்னிடம் கூறினான்.

**எங்களிடத்தில் தொலைகாட்சிக்பெட்டி கிடையாது. என் வீட்டில் என்றைக்குமே ஒன்று இராது. நீங்கள் ஒன்றை வைத்துக்கொள்ள விரும்பினால், அது உங்களைப் பொறுத்தது. அதை வைக்க வேண்டாமென்று தேவன் என்னிடம் கூறினார்.**

இங்கு நாங்கள் வந்தபோது, இந்த இனிமையான, முதிய சகோதரியின் வீட்டை வாடகைக்கு எடுத்தேன். அவர்களுடைய வீட்டில் ஒரு தொலைக்காட்சி பெட்டி இருந்தது. ஏனெனில் தொலைகாட்சி பெட்டியுடனே அவர்களுடைய வீடு வாடகைக்கு கொடுக்கப்பட்டது.

மார்க்க சம்பந்தமான நிகழ்ச்சிகளைக் காண நான் பிள்ளைகளை அனுமதிப்பதுண்டு, அவர்கள் என்னை அழைத்து, சுவிசேஷ

பாடல்கள் நிகழ்ச்சி ஒன்று நடப்பதாகக் கூறினர்.

சுவிசேஷப் பாடல்களை பாடுபவர் என்று தங்களை அழைத்துக் கொள்ளும் அவர்கள் ஒரு கூட்டம் ரிக்கிகளைப் போலவே நடந்து கொண்டனர்.

அவர்கள் நடத்தை, தங்கள் உடலைக் குலுக்குதல், ரிக்கி தலைமயிர் கத்தரிப்பு போன்றவை அனைத்தும் இயேசு கிறிஸ்துவுக்கு இழிவைக் கொண்டு வருவதாக அமைந்திருந்தன. அது கேலிக்கூத்தைப் போல் காட்சியளித்தது.

காயீன் அப்படிப்பட்ட ஒருவனாக இருந்தான். அவன் நிச்சயமாக தன் செயல்களில் மதாபிமானம் கொண்டவனாக இருந்தான். ஆனால் அவனுக்குள் தவறான வித்து இருந்தது. பாருங்கள். ஆகவே அது சர்ப்பத்தின் வித்தை தோன்றச்செய்தது. சாத்தான் ஏதேனின் வித்தின் மேல் சர்ப்பமாக சீறினான். அது தான் காயீனைத் தோன்றச்

செய்தது. அவன் தன் விஷத்தை அதன் மேல் பூசினான்.

**மறுரூபப்படுத்தும் வல்லமை** *65-1031*M



## தொலைகாட்சி உலகத்துக்கே ஒரு சாபமா? – நான் இணங்குகிறேன்

**இன்றிரவு முதல் கேள்வி:**

*சகோ பிரான்ஹாமே, தொலைக்காட்சி உலகத்துக்கே ஒரு சாபம் என்று நான் நினைக்கிறேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?*

நல்லது, அதை எழுதினவர் யாராயிருப்பினும், நான் உங்களுடன் இணங்குகிறேன், அவர்கள் அதை உலகிற்கு சாபமாக்கிவிட்டனர். அது உலகிற்கு

ஆசீர்வாதமாக இருந்திருக்ககூடும், ஆனால் அவர்களோ அதை சாபமாக்கி விட்டனர்.

என் அருமை மக்களே, அப்படிப்பட்ட ஒன்றை நீங்கள் எந்தவகையில் நோக்குகிறீர்கள் என்பதை அது பொறுத்தது. தொலைக்காட்சி சாபமாகக் கருதப்படுமானால், செய்திதாளும் சாபமே, வானொலியும் சாபமே, அநேகமுறை தொலைபேசியும் சாபமாக உள்ளது. பாருங்கள், பாருங்கள், பாருங்கள், பாருங்கள்? நீங்கள் அதை எவ்விதமாக செய்துவிடுகிறீர்கள் என்பதை அனுசரித்து அது உள்ளது.

அன்றிரவு அந்த சகோதரன் கூறினவிதமாக, தொலைக்காட்சியில் இப்பொழுது சுவிஷேச நிகழ்ச்சிகளே இருப்பதில்லை. ஏனெனில் அதற்கு அதிக பணம் தேவைப்படுகிறது. முழு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் ஒரு எளிய போதகருக்கு தொலைக்காட்சியில் ஒரு நிகழ்ச்சியைத் தர இயலாது. எனவே..... அன்றிரவு சகோதரன் இங்கு கூறினாரென்று நினைக்கிறேன். அல்லது வேறெங்கோ. அவர்,

“உங்கள் வானொலிப்பெட்டியின் மேலுள்ள தூசைத் துடைத்துவிட்டு அதை மூலையிலிருந்து கொண்டு வந்து சுவிசேஷ நிகழ்ச்சிகளைக் கேளுங்கள்” என்றார். அது உண்மை.

ஆனால் அன்பார்ந்த நபரே, நீங்கள் யாராயிருந்தாலும் உங்களுடன் நான் நிச்சயம் இணங்குகிறேன். அது மானிட வர்க்கத்துக்கே மிகவும் வெறுக்கப்படத்தக்க ஒன்றாக உள்ளது.

அரசாங்கத்துக்கு வரிகளாக செல்லவேண்டிய பணத்தை அவர்கள் எடுத்து, சிகரெட்டுகள், விஸ்கி போன்றவைகளை விளம்பரப்படுத்துவதற்காக நிகழ்ச்சிகளை நடத்தி, அரசாங்க வரிகளிலிருந்து சலுகை பெற்று, அதன் பிறகு அவர்கள் சிறுதொகையைப் பெற, போதகர்களை நீதிமன்றத்துக்கு கொண்டு செல்கின்றனர்.

நான் உங்களுடன் இணங்குகிறேன். அது மிகவும் பயங்கரமான ஒன்று... நீங்கள் அதில் காணும் நிகழ்ச்சி என்னவென்பதைப் பொறுத்தது. இந்த கேள்வியைக் கேட்டது

சகோதரன் அல்லது சகோதரி யாராயிருப்பினும் உங்களுக்கு என் நன்றி.

**பரிசுத்த ஆவியின் பேரில் கேள்விகளும் பதில்களும்** *59-1219*



## 13. அழுகிப்போன அருவருப்பான தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் - சுவற்றின் மேலுள்ள கையெழுத்து

தொலைக்காட்சி மோசமாகிக் கொண்டே வந்து, வானொலியிலும் செய்தித்தாள்களிலும் சிகரெட்டுகள், புகையிலைகள், விஸ்கி போன்றவைகளை விளம்பரம் செய்து, அவலட்சணமாக உடுத்தியுள்ள பெண்கள், ஆபாசமான நகைச்சுவை, தொலைக்காட்சி நிகழ்ச்சியில் ஆபாசமான நகைச்சுவை துணுக்குகளைக் கூறுபவர்கள்; அமெரிக்கா இதற்கு மயங்கிவிட்டது...

நேபுகாத்நேச்சார் ராஜாவின் அரண்மனையில் அன்றிரவு பயங்கர ஜன நெருக்கடி; கேளிக்கை போன்றவை நடந்து கொண்டிருந்தன. அங்கு மது, விருந்து, நடனம், தொலைக்காட்சி நிகழ்ச்சி அக்காலத்தில் இருந்திருக்குமானால், அதுவும் மற்றும் அவர்களுடைய கோமாளிகள் வெளியே வந்தனர்.

அப்பொழுது ஒரு விரல் சுவற்றில் எழுதினது.

**விளங்காத சத்தம்** *60–1218*



**மனநிலை கோளாறை உண்டாக்கும் தொலைக்காட்சி பெட்டியை உங்கள் துப்பாக்கியை உபயோகித்து நொறுக்குவது நலம்**

தன் வீட்டில் தொலைக்காட்சி பெட்டியை வைத்திருக்கும் ஸ்திரீயிடமிருந்து நாங்கள் வாடகைக்கு வாங்குறோம். என் வீட்டில் தொலைக்காட்சி பெட்டி வைத்துக்கொள்ள எனக்குப் பிரியமில்லை. இல்லை. ஐயா. அது என் வீட்டில் இருப்பது எனக்குப் பிரியமில்லை. அதை துப்பாக்கியால் சுட்டு உடைத்து விடுவேன். அந்த பொல்லாத காரியத்தோடு யாதொரு தொடர்பும் கொள்ள எனக்குப் பிரியமில்லை. ஆம், ஐயா. ஆனால் அதை...

அரிசோனா நாட்டைச் சேர்ந்தவர்களாகிய உங்களைக் குறித்து இங்கு கூற விரும்புகிறேன். பள்ளிகளைக் குறித்த புள்ளி விவரத்தை அன்றொரு நாள் நீங்கள் கண்டிருப்பீர்கள் இல்லையா?

அரிசோனா பள்ளிகளில் படிக்கும் மாணாக்கர்களில் எண்பது சதவிகிதம் மனநிலை கோளாறினால் அவதியுறுகின்றனர்.

அவர்களில் அறுபத்தேழு சதவிகிதம் தொலைக்காட்சியைக் கண்டதால். அதை குறித்து என்ன சொல்லுகிறீர்கள்?

எனவே உங்கள் துப்பாக்கியை உபயோகித்து அதை நொறுக்குவது நலம்! பாருங்கள்?

பிசாசு அதை உங்கள் மேல் தெளிக்க இடங்கொடுக்காதீர்கள். இல்லை, ஐயா. ஜனங்கள், நான் கூறினது போன்று, நியாயத்தீர்ப்புக்கு வரவேண்டியதில்லை என்பது போல் நடந்து கொள்கின்றனர்.

**மறுரூபப்படுத்தும் தேவனுடைய வல்லமை** *65-0911*



## தொலைக்காட்சி பெட்டியை உங்கள் வீட்டினின்று அப்புறப்படுத்தி தூர எறியுங்கள்

யாரை விசுவாசிக்க வேண்டும்? உங்கள் வீட்டார் இரட்சிக்கப்படுவதற்கென இயேசு கிறிஸ்துவை விசுவாசியுங்கள்.

அந்த அடையாளத்தை உங்கள் வீட்டாரின் மீது போடுங்கள்.

நீங்கள் செய்ய வேண்டியது என்ன? வீட்டில் காணப்படும் குப்பை (TRASH) அனைத்தையும் அகற்றுங்கள். குட்டை பாவாடையும், அரைக்கால் சட்டையும், சீட்டாட்டத்தையும், சிகரெட்டுகளையும், டெலிவிஷன்களையும், இதுபோன்ற எல்லாவற்றையும் தூர எறியுங்கள்.

ஏனெனில் நீங்கள் அடையாளத்தை போடப்போகின்றீர்கள். ஆம், ஐயா, அவையனைத்தையும் அகற்றுங்கள்.

நடனங்களையும், பார்ட்டிகளையும், ராக் அண்டு ரோல் நடனங்களையும், கீழ்த்தரமான செய்தித்தாள்களையும், உலகின் காரியங்கள் அனைத்தையும் வீட்டினின்று அப்புறப்படுத்தி, உதைத்து தள்ளி விடுங்கள்.

"இந்த இடத்தை நாங்கள் சுத்தமாக்குகிறோம்" என்று கூறுங்கள்.

**அடையாளம்** *63-0901*M





## நான் தொலைக்காட்சிக்கு விரோதமானவன்

நான் தொலைக்காட்சியை விரும்புவதில்லை.

உங்களுக்கு தெரிந்துள்ளபடி, அதற்கு நான் விரோதம்.

**அறுப்பின் நேரம்** *64–1212*





# தொலைகாட்சி பெட்டியை அப்புறப்படுத்தி விட்டு குடும்ப ஜெபத்தை மறுபடியும் தொடங்குங்கள்

தந்தைமார்களே, தாய்மார்களே உங்கள் வீட்டில் ஜெபத்தை ஏற்படுத்தி, தொலைக்காட்சி பெட்டியை எடுத்துப்போட ஆயத்தமா? மேசையின் மேலுள்ள சீட்டுக்கட்டை தூக்கி எறிய ஆயத்தமா?

உங்கள் பிள்ளைகள் படிக்கும் 'காமிக்ஸ்' புத்தகங்கள், பிசாசு அவர்களுக்கு கொடுக்கப்போகும் அதிர்ச்சிக்கு அவர்களுடைய பிஞ்சு உள்ளங்களை ஆயத்தப்படுத்துகின்றன.

உங்கள் பழைய குடும்ப ஜெபத்தை மறுபடியும் நிலைநாட்ட ஆயத்தமா? அல்லது இப்பொழுதுள்ள உங்கள் வழியில் நீங்கள் தொடர்ந்து செல்ல விரும்புகிறீர்களா?

நீங்கள் தொடர்ந்து செல்ல விரும்பினால், அதை விட்டு வெளியே வரும் நிலையில் நீங்கள் இன்னும் இல்லை.

நீங்கள் சிம்சோனைப்போல், செலுத்த வேண்டிய கிரயத்தைக்கண்டு, ஆயத்தமடைந்து, "கர்த்தாவே, நானும் அவர்களோடு கூட மடியட்டும்" என்று கூற வேண்டுமென்று ஜெபிக்கிறேன்.

**இன்னும் ஒருவிசை, கர்த்தாவே** *63-0120*E



## அசுத்தமான தொலைக்காட்சிகளிலிருந்து விலகியிருங்கள்

இப்பொழுது, பிசாசு தனது கல்வியை உங்கள் மேல் தெளிக்க இடம் கொடுக்காதீர்கள். வேண்டாம், வேண்டாம். அது உங்களைக்கொன்று போடும்.

“என் தாயார், என் தகப்பனார், என் பாட்டி சேர்ந்திருந்த சபையை நானும் சேர்ந்திருக்கிறேன்” என்பதை பிசாசு உங்கள் மேல் தெளிக்க இடங்கொடுகாதீர்கள்.

வேதம் ஏழு சபைகளைக் குறித்தும் மற்றவைகளைக் குறித்தும் உரைக்கும்போது, அது அனைத்தும் விதைக்குள் சென்று விட்டது என்கிறது. எல்லாமே அழுகி விட்டது. எல்லாமே நொதிக்கிற இரணமாயுள்ளது.

பிசாசு உங்கள் மேல் தெளிக்க இடங்கொடுத்து, “அது உயரிய நெறி. நாங்கள் முன்காலத்தவரைக்காட்டிலும் அதிக கல்வி பயன்றுள்ளோம்” என்று கூறாதீர்கள்.

பிசாசு அதை உங்கள் மேல் போட இடங்கொடுக்காதீர்கள்; அவனுடைய நாகரீகம், கல்வி, விஞ்ஞானம் ஆகிய முழுத் திட்டத்தை உங்களுக்குக் காண்பித்தேன். அவன் அதை சபையில் நுழைத்து விட்டான். அதற்கு செவி கொடுக்காதீர்கள். அந்த அசுத்தமான தொலைக்காட்சிகளிலிருந்தும் மற்றவைகளிலிருந்தும் விலகியிருங்கள்.

**மறுரூபப்படுத்தும் தேவனுடைய வல்லமை**

*65-0911*



## வேதத்திலுள்ள கதைகளைக் (பிள்ளைகளுக்கு) கூறுவதற்குப் பதிலாக பிள்ளைகளைத் தொலைக்காட்சிப்

## பெட்டிகளுக்கு முன்னால் உட்காரச் செய்கின்றனர்

இவ்விதமாக வேதத்திலுள்ள கதைகளை (பிள்ளைகளுக்கு) கூறுவதற்குப் பதிலாக பிள்ளைகளைத் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு முன்னால் உட்காரச் செய்து ஹாலிவுட்டின் திருட்டுகளைக் குறித்து தாய்மார்கள் பிள்ளைகளுக்குக் காட்டுவது எவ்வளவு மிகவும் மோசமான காரியமாயிருக்கிறது?

**தேவன் ஒரு அருளப்பட்ட ஆட்டுக்குட்டியை உடையவராயிருக்கிறார்** *64-0620E*



★★★★★